இடங்களில் பல டாக்டர் பதவிகள் காலியாக இருக்கின்றன. எல்லா மருத்துவமனைகளிலும் போதுமான மருந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் கோவில் பட்டி மருத்துவமனையில் போதுமான அளவுக்கு மருந்துகள் இல்லை; போதுமான அளவுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எந்த மருத்துவமனையில் அல்லது மருந்தகத்தில் மருந்து இல்லை என்று சொல்லி விவரமாக எழுதிக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா மருத்துவமனைகளிலும் மருந்துகள் குறைவற்றிருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்த மாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடவாசல் ஊராட்சி ஒன்றிய செருகளத்தூர் சித்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக உயர்த்தல்.

237—(*வினா எண் 10533) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செருகளத்தூர் சித்த மருத்துவ மனையை அரசு மருத்துவமனையாக உயர்த்தி, படுக்கை வசதி களை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, பிரைமரி ஹெல்த் சென்டர் அல்லது அரசு மருத்துவமனை தொடங்கும் நோக்கம் நம்முடைய அரசின் பரிசீலனையில் உள்ளதா? தமிழ் நாட்டில் எத்தனை இடங்களில் தொடங்கும் திட்டம் உள்ளது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மூலக் கேள்வி சித்த மருத்துவமனையைப் பற்றியது. இப்போது கேட்பது ஆரம்பச் சுகாதார நிலையம் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு 149 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, குத்தாலம் தொகுதி குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செருகளத்தூர் ஊரில் இருக்கிற சித்த மருத்துவமனையை, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 158 பிரைமரி ஹெல்த் சென்டர்களைத் தொடங்க அரசு முடிவு செய்திருப்பதைக் கருத்திற்கொண்டு,

1987 ஏப்ரல் 1]

செருகளத்தூரைச் சுற்றி ஏறத்தாழ 50 குக்கிராமங்கள் இருப்பதால் அந்தக் குக்கிராமங்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நிதிநிலைமை சங்கடமாக இருந்தாலும்கூட, இந்த ஆண்டு அல்லது வருகின்ற ஆண்டு அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி, படுக்கை வசதிகளை அதிகப்படுத்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சித்த மருத்துவமனை என்பது ஆரம்பச் சுகாதார நிலையத்தில் தொடங்கப்படுகின்ற ஒரு கிளை ஆகும். தனியாக இதற்கு ஒரு மருத்துவமனை தொடங்கப்படவில்லை. ஆகவே, ஆரம்பச் சுகாதார நிலையம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் சித்த மருத்துவமனை, மருத்துவர் தேர்வு பெற்று வருவதற்கு ஏற்ப, ஆரம்பிக்கப்படும். அப்படி வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலும் அமைக்கப்படும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஓடும் பாலாறு.

238—(*வினா எண் 11312) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் ஓடும் பாலாற்றில் கலக்கும் இரசாயனம் மற்றும் கழிவு நீரால் 25 ஆண்டுகளில் அந்தத் தண்ணீர் கெட்டுவிடும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தகவல் உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து அரசின் கவனத்திற்கு வரவில்லை.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து இராணிப்பேட்டை வரையில் பாலாற்றில் கழிவுநீர் கலப்பதால் தற்போது குடிநீருக்குப் பாதிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக தோல் சம்பந்தமான வியாதிகள் வருகின்றன. இந்தக் குறையைத் தீர்க்கின்ற வகையில் வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற அங்கே இருக்கிற தொழிற்சாலைகள் முன்வந்திருக்கின்றனவா? இல்லை என்றால் அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS